திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) செயல்முறைகள்
முன்னிலை– திரு.மா.பரமேஸ்வரன்.,

செ.மு.எண்.தா3 / 1607/2025–2 நாள்.24.07.2025

பொருள் பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் அறிவிக்கை எண் – 01/2024 – போட்டித்தேர்வு தொகுதி – IV இல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவி – பணி நாடுநர்கள் தேர்வு செய்யப்பட்டது – பணி நியமனம் அளிக்கப்பட்டது – பணியில் சேர்ந்து கொண்டது – இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்தல் மற்றும் தகுதி காண் பருவம் துவக்குதல் – ஆணை வெளியிடுதல்.

பார்வை

1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு சென்னை கடித எண்.327/PSD-D3/2025. நாள்.27.02.2025
2. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), அவர்களின் செயல்முறைகள் ந.க.தா3/1607/2025–2, நாள்.27.06.2025.
3. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), அவர்களின் கடித ந.க.தா3/1607/2025, நாள்.27.04.2025.
4. உதவி இயக்குநர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி கடித ந.க.எண்.000006/அ4/2024, நாள்.27.06.2025.
5. இதர தொடர்புடைய ஆவணங்கள்.

–..–

உத்தரவு –

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு (அறிவிக்கை எண்–01/2024) தொகுதி IV-ன் கீழ் தேர்வு செய்யப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு, இளநிலை உதவியாளர் நிலையிலான பணியிடத்திற்கு, ஒதுக்கீடு செய்யப்பட்டு தெரிவு பட்டியல் பார்வை 1–ல் காணும் கடிதம் வழி வரப்பெற்றதனைத் தொடர்ந்து, பார்வை 2–ல் காணும் செயல்முறைகளின்படி திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் தற்காலிக பணியமர்வு செய்யப்பட்ட கீழ்காணும் இளநிலை உதவியாளருக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இவருக்கெதிரே கலம் (4) – ல் கண்டுள்ள நாளில் இவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் வரன்முறை செய்தும், அன்றைய நாள் முதல் தமிழ்நாடு அமைச்சப்பணி பத்திகளின் விதி 32(a)(i)–இன்படி, தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை துவக்கியும் இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

(த.பி.பா)

Scanned with OKEN Scanner

| வ. எண் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்) | பணியில் சேர்ந்த தேதி | பணிவரன்முறை செய்து தகுதிகாண் பருவம், துவக்கப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | R.சந்திரிகா,<br>இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>முசிறி. | 27.03.2025<br>முற்பகல் | 27.03.2025<br>முற்பகல் |

<u>நிபந்தனைகள்:</u>

இவ்வாணையானது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வின் தொகுதி நான்கில் அடங்கிய தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின்கீழ் இளநிலை உதவியாளர் பதவிக்கான பணிநாடுநர்கள் தெரிவு தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையில் நிலுவையிலுள்ள வழக்குகளில் பிறப்பிக்கப்படும் தீர்ப்புகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

**"The regularization is subject to the outcome of W.A.(MD) No.181. of 2023 and C.M.P (MD) No.2247 of 2023 pending before the Hon'ble Madurai Bench of Madras High court and other Cases if any pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of Madras High Court relating to this recruitment".**

2) இவரது பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றின் மெய்த்தன்மை அறிக்கை பார்வை 4–இல் காணும் கடிதவழி வரப்பெற்றுள்ளதனைத் தொடர்ந்து, இப்பணிவரன்முறை ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3) இவர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 32(a)(i)–இன்படி, பணிவரன்முறை செய்யப்படும் நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். இரண்டாண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவத்தினை பூர்த்தி செய்திட வேண்டும். மேலும், இவர் மனநிறைவளிக்க தக்க வகையில் தகுதிகாண் பருவகாலத்தை பூர்த்தி செய்த பின்னரே பதவி உயர்வுக்கு பரிசீலிக்கப்படுவார்.

4) இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசுப்பணியாளர்கள் பயிற்சி நிறுவனத்தில் அடிப்படை பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் இளநிலை உதவியாளர் நிலை பணியாளர்களுக்கான முதுநிலை பட்டியலின் படி பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு நடத்தப்படும் அடிப்படை பயிற்சியில் முழுமையாக தேர்ச்சி பெற்ற பின்னரே தகுதி காண் பருவம் விளம்பி ஆணையிடப்படும்.

(கு.பி.பா)

Scanned with OKEN Scanner

5) இவர் தனது தகுதி காண் பருவ காலத்திற்குள்ளாக அரசாணை (நிலை) எண்.33, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 02.03.2017 இல் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான பின்வரும் துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

| வ. எண் | தாள் குறியீடு | தேர்வின் பெயர் |
|---|---|---|
| 1. | 008 | Department Test for the staff of Rural Development and Panchayatraj department - Tamilnadu Panchayat Act, 1994 & Rules and Constitution of India. |
| 2. | 166 | The Panchayat Development Account Test |
| 3. | 010 | Department Test for the staff of Rural Development and Panchayatraj Departmentnt- Scheme Administration. |
| 4. | 172 | The Tamilnadu Government Office Mannual Test. |

6) இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் மேற்கண்ட நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை தனிப்பட்ட காரணங்களினால் அடையத் தவறி தகுதிகாண் பருவம் விளம்ப இயலாத நிலையில் 2016– ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டப்பிரிவு 31–ன் படி பணியிலிருந்து வெளியேற்றப்படுவார்.

24/7/25

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி),
திருச்சிராப்பள்ளி.

24.7.2025

பெறுநர்– செல்வி.R.சந்திரிகா,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
முசிறி – உரிய வழியாக.

நகல் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம்,
முசிறி – (சார்வு செய்து சார்வு நகல் அனுப்பிடும் பொருட்டு)

நகல் தா3 இருப்பு கோப்புக்கு.

ந.க.அ1/2312/2025
நாள் : 7.8.2025

ஊராட்சி ஒன்றியம்
முசிறி

நகல் சார்வு செய்யப்படுகிறது

4/4

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டாரம்),
ஊராட்சி ஒன்றியம், முசிறி. RE-426
7/8/2025

பெறுநர்
செல்வி. R. சந்திரிகா,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
முசிறி.

Scanned with OKEN Scanner